கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2016/ 2017 டிசம்பர் - 2019

# HYS 3233 History of South East Asia AD 1500 - 1960
# HYS 3233 தென்கிழக்காசிய வரலாறு கி.பி 1500 - 1960

நேரம் : 3 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

## பகுதி : I

1. பர்மாவில் இடம்பெற்ற பிரித்தானியர் ஆட்சியை மையமாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
   அ. பிரித்தானியர் ஆதிபத்தியம் (10 புள்ளிகள்)
   ஆ. பிரித்தானியர் நிர்வாக முறை (10 புள்ளிகள்)

2. அ. பிரேஞ்சுக் காலனித்துவத்தின் போது அவர்களால் வியட்நாமில் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகளை விளக்குக. (10 புள்ளிகள்)
   ஆ. காலனித்துவத்திற்கு எதிரான வியட்நாமிய புரட்சி இயக்கங்கள் பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

3. காலனித்துவ கால தென்கிழக்காசியாவில் ஏற்பட்ட மாற்றங்களை மேல்வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க.
   அ. இந்தோனேசியப் பொருளாதார வளர்ச்சி (10 புள்ளிகள்)
   ஆ. பிலிப்பைன்சின் சமூக நலத்திட்டங்கள் (10 புள்ளிகள்)

## பகுதி II

4. "தென்கிழக்காசியாவின் அமைவிடம் ஐரோப்பியர் ஆதிபத்தியத்திற்குச் சாதகமாக அமைந்திருந்தது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை சமகாலப் போக்கினூடாக மதிப்பீடு செய்க. (20 புள்ளிகள்)

5. இந்தோனேசிய விடுதலைப் போராட்டம் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் விமர்சனக் கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

6. தென்கிழக்காசியாவின் சயாம் நாடு, ஐரோப்பிய காலனித்துவ ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்படாமைக்கான காரணங்களைக் குறிப்பிட்டு, அதன் சாதக பாதக நிலை பற்றி கட்டுரை வரைக. (20 புள்ளிகள்)

7. "இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஆசியா ஆசியருக்கே என்ற ஜப்பானின் யுத்தக்கொள்கை தென்கிழக்காசிவிலும் பிரயோகிக்கப்பட்டது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)